★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 5563

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆனி 15உ வியாழன் (28—6—56) ★ ★ வெளியூர்: ஆனி 16உ வெள்ளி (29—6—56) [இதழ் 12

மழை வருமா? வராதா?

பந்தயம் கட்டி சூதாடியவர்கள் கைது!

கல்கத்தா, ஜுன் 27—

மழை வருமா? வராதா?—என்று பந்தயம்கட்டி சூதாடியதாக, சுமார் 95 பேர்களைக் கைது செய்துள்ளனராம், கல்கத்தா போலீசார்!

பந்தயம் கட்டுவது பற்றிய சில தஸ்தாவேஜுகளையும், 2,100 ரூபாயையும் போலீசார் கைப்பற்றியுள்ளனராம்.

'ஆசாத் மழை முன்னறிவிப்புப் பள்ளி' என்ற பலகையைத்

(4-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு இலட்சியம் உணரப்படுகிறது

'நான்கு தனித்தனி மொழிவழி மாநிலங்கள் தென்னாட்டுக் கூட்டாட்சி அமைத்துக் கொள்வது ஏற்கத்தக்கதே!'

'பல மொழி பேசும் ஒரே மாநிலமான தட்சிணப் பிரதேசம் சிக்கலைக் கிளப்பும்'

'ஆரியர்—திராவிடர் வேற்றுமைக் கிளர்ச்சிக்குக் காரணம் என்ன?'

கருமுத்து தியாகராசன் கருத்து விளக்கம்

"தென்னாட்டில் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழி வழி மாநிலங்கள் தனித்தனியே இயங்குவதோடு, தமது பொதுநலத்திற்கென்று ஒரு கூட்டாட்சியை அமைத்துக் கொள்வதே தட்சிணப் பிரதேசம் என்றால், அது ஏற்கத்தக்கதே; அவ்வாறன்றி, 'தட்சிணப் பிரதேசம் என்பது பலமொழி பேசும் ஒரு மாநிலம்' என்றால், அது மொழிச் சிக்கலைக் கிளப்பும்.

"தமிழ் நாட்டில் தமிழ் பேசும் மக்களில் ஒரு சாரார், இன்னும் தமிழைத் தாய்மொழியாகக் கொள்வதில்லை. இப்படியே தமிழ் நூல்களையும், சமயக் குரவர்களையும், தமிழர் வழக்க ஒழுக்கங்களையும் தம்முடையவை எனக் கருதுவதில்லை. இவற்றுக்கு மாறாக ஆரிய (வட) மொழியையும், ஆரிய நாகரீகப் பண்பாட்டையும் உயர்த்திப் பேசியும், தமிழ் மொழியையும், திராவிட நாகரீகப் பண்பாட்டையும் தாழ்த்திப் பேசியும் வருகின்றனர். இதுபோன்ற காரணங்களால், ஆரியர்—திராவிடர் என்ற வேற்றுமைக் கிளர்ச்சி நிலவிய வண்ணமுள்ளது. பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழர்களோடு சேர்ந்து வாழும் இவர்கள், தம்மைத் தமிழராகக் கருதித் தமிழ் பண்பாட்டிற்கு ஏற்றவாறு நடப்பார்களானால் இக்கிளர்ச்சி மறைந்து ஒழியும்."

என்று, சேலம் திருக்குறள் கழகச் சார்பில், திருவள்ளுவர் நினைவு நாள் 15-ம் ஆண்டு விழாவில் தலைமை வகித்த திரு. கருமுத்து தியாகராச (செட்டியார்) அவர்கள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"நமது மாநிலத்துக்கு உரிய 'தமிழ் நாடு' என்ற பெயரை இடுவதற்கு அரசினர் மறுப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். இது கிளர்ச்சிகளுக்கும், தீய விளைவுகளுக்குக் காரணமாகிறது. சட்டசபையில் இதுபற்றிய கேள்வி கேட்கப்பட்டபோது, கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் 'தமிழ் நாடு' என்ற பெயர் இலக்கியத்திலும், வரலாற்றிலும் இல்லை என்று துணிந்து கூறியது, தமிழ் மக்களுக்குப் பெரும் வியப்பைத் தந்திருக்கிறது! 'தமிழகம்,' 'தமிழ் நாடு' என்ற பெயர்கள் சங்க நூல்களிலும், பிற்கால நூல்களிலும் வழங்கி வந்திருப்பது மறுக்கவொண்ணா உண்மையாகும்.

"மொழியும் சமயத்தைப் போன்று தெய்வீகமானது. இதைத் தலைவர்கள் உணராததால் நாட்டில் பெருங் குழப்பமும் கேடும் விளைந்திருக்கின்றன; இதற்குத் தலைவர்களே பொறுப்பாவார்கள். பல்வேறு மொழி பேசும் 40 கோடி மக்களைக் கொண்ட இந்தியத் துணைக் கண்டத்தில் எல்லோருக்கும் பொதுவான ஒரு மொழியை உருவாக்க எண்ணுவது வெறும் பகற்கனவாகும். கலப்பு மொழியான இந்தியை ஒருக்காலும் அரசியல் மொழியாக உயர்த்த முடியாது. அது இலக்கணம், இலக்கியம், சாத்திரம், கற்பனை, கருத்து, உருவகம் முதலியவற்றால் வளம் பெற்றதல்ல! முனிவர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் மலிந்தன்றோ ஒரு மொழி வளம்பெற முடியும்? இந்தி இங்கிலையடைய பலநூறு நூற்றாண்டுகளாகும். பல நூற்றாண்டுகளாகப் பண்பட்டு வந்துள்ள ஆங்கிலமே குறைபாடுடைய தாய் லத்தீன், பிரெஞ்சு முதலிய வேற்று மொழிச் சொற்றொடர்களையும் இரவல் வாங்க வேண்டியிருக்கிற நிலையில், நேற்றுத் தோன்றிய இந்தி எப்படி அரசியல் மொழியாக முடியும்? நம் தாய் மொழிக்கு முதலிடமும், ஆங்கிலத்துக்கு இரண்டாவது இடமும் கொடுப்பதே பொருந்தும்.

"இந்தியாவிலுள்ள எல்லா வட்டார மொழிகளையும் முறையாகப் பேரரசின் மொழியாக்கா விட்டால், பிளவு ஏற்பட்டு நாடு சிதறுண்டுபோவது திண்ணம். நாடு அடிமையுற்றிருந்த போது, பிறந்துவளர்ந்துள்ள இப்போதுள்ள 'தலைமுறை' இதை ஒருவாறு பொறுத்தாலும், பின்னர்வரும் 'தலைமுறை' இதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. ஆகவே, இந்தப் பெரு மொழிச் சிக்கலை தம் வாழ்நாளிலேயே நன்கு தீர்த்து வைக்குமாறு நேருவுக்கு எடுத்துரைக்க வேண்டுவது நம் கடமையாகும்."

தென்னாட்டவர் கோரிக்கை நிறைவேறுமா?

சென்னை, ஜுன் 27—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆலைத் துறையில் 14,000 தறிகள் மொத்தமாக ஒதுக்க வேண்டுமென்று தென்னாட்டு தனி ஆலை சொந்தக்காரர்கள் வற்புறுத்திக் கேட்பார்களெனத் தெரிகிறது.

ஆண்டுதோறும் 35 கோடி கெசம் துணி அதிகப்படியாக உற்பத்திச் செய்வதற்கு வசதியாக அத்தனை தறிகளைக் கோருவார்களாம்.

ஊழியர்களை மிரட்டிப் பார்க்கிறது சர்க்கார்!

சம்பளம் வாங்க மறுத்தால் ஒழுங்கு நடவடிக்கையாம்!

சங்கத்தின் அங்கீகாரம் ரத்தாகுமாம்!

சென்னை, ஜுன் 27—

சென்னை சர்க்கார் கெஜட் பதிவில்லாத ஊழியர்கள், வரும் ஜுலை 2-ல் நடத்தவிருக்கும் சம்பள மறுப்பு போராட்டத்தை ஒடுக்க, சர்க்கார், இப்போது மிரட்டல் பாணம் தொடுத்திருக்கிறது!

சர்க்கார் ஊழியர் ஒழுங்குமுறை பற்றிய சட்டவிதி ஒன்றினைச் சுட்டிக்காட்டி, சம்பளம் வாங்க மறுப்போர் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இந்த சம்பள மறுப்பு இயக்கத்தை நடத்துகிற ஊழியர் சங்கத்திற்கான சர்க்கார் அங்கீகாரம் ரத்து செய்யப்படும் என்றும் சர்க்கார் அறிக்கை ஒன்றின் மூலம் மிரட்டியிருக்கின்றனர்.

'என்ன பாடுபட்டேனும் சர்க்கார், தங்கள் ஊழியரிடை ஒழுங்கையும், அமைதி முறையையும் நிலை நிறுத்த உறுதி பூண்டிருப்பதாயும், ஊழியர்களின் எந்தவிதமான நிர்ப்பந்தத்திற்கும் சர்க்கார் பணிவது என்பது இல்லை' என்றும் 'ஜம்பம்' பேசியிருக்கிறது, சர்க்கார்!

'நேரடி நடவடிக்கை என்று அச்சுறுத்த நினைக்கிற வரை சர்க்கார் ஊழியர் சங்கத்தின் கோரிக்கைகளை எடுத்தும் பார்க்காது,' என்றும் அறிக்கை கூறுகிறது.

"சம்பள விகிதம், சராசரிப்படி உயர்வு இவை போன்ற முக்கியமான பிரச்சினைகள், சர்க்காரின் நிதி நிலையை பாதிக்கக்கூடியவையாகும்; எனவே, அவற்றை ஒரு அமைதியான சூழ்நிலையில் பரிசீலிக்கவேண்டும். உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு, ஆர்ப்பாட்டம் நடத்துவதின் மூலம், எதையும் சாதிக்க முடியாது—சாதிக்க நினைக்கக்கூடாது"

என்றும், சர்க்கார் இதோபதேசம் புரியத் தொடங்கியுள்ளது!

(4-ம் பக்கம் பார்க்க)

பரம்பிக்குளம் திட்டத்திற்கு எதிராகத் தீர்மானம்

தமிழர்கள் மீது கேரள கம்யூனிஸ்டுகள் பாய்ச்சல்

திருச்சூர், ஜுன், 25—

"மாகாணப் புனரமைப்பு மசோதாவின்படி அமைக்கப்படும் கேரள மாகாணத்துக்கு இன்னும் அதிகமான இடங்கள் கிடைக்க நியாயம் உண்டு.

"முற்றிலும் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஒரு சட்டசபை கேரள மாகாணத்தில் அமைக்கப்படும்வரை, பரம்பிக்குளம் நீரைப் பயன்படுத்துவதுபற்றி சென்னை அரசாங்கமும், திருவாங்கூர்—கொச்சி அரசப் பிரமுகரின் ஆலோசகரும் எந்த உடன்பாட்டுக்கும் வரக்கூடாது"

மேற்படி தீர்மானங்கள் இரண்டையும், கடந்த மூன்று நாட்களாக நடைபெற்று முடிவுற்ற கேரள மாகாண கம்யூனிஸ்ட் மாநாடு நிறைவேற்றி இருக்கிறது.

மேலும், மேற்குக் கடற்கரைப் பகுதியிலிருந்து அசையும் சொத்துக்களை சென்னை அரசாங்கம் மாற்றக் கூடாது என, இந்திய அரசாங்கம் கட்டளைப் பிறப்பிக்க வேண்டும் என்று மற்றொரு தீர்மானத்தையும் மாநாடு நிறைவேற்றி இருக்கிறது.

தோழர்களே, நீங்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொண்டீர்களா—இல்லையெனில், உடனே பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

—தலைமைக் கழகம்

உ

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 28—6—'56 வியாழன்

சர்க்கார் ஊழியர்கள் போராட்டம்

அறிவிக்கப்பட்டுள்ளபடி காரியங்கள் நடைபெறுமானால், வரப்போகும் ஜூலை 2, மிக முக்கியமானதோர் நாளாகும். அன்று சென்னை சர்க்கார் ஊழியர்கள்—'கெஜட்' பதிவு பெறாதவர்கள், 'சம்பளம் வாங்க மறுத்து' தங்களின் நியாயமான கோரிக்கைகளுக்கான போராட்டத்தின் முதல் கட்டத்தைத் துவக்குவதாக அறிவித்துள்ளனர். சர்க்கார் ஊழியர்கள் இந்த நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதின் விளைவுகளுக்கு, முழுப் பொறுப்பும் ஏற்க வேண்டியவர்கள் சென்னை அமைச்சரவையினர் தான் என்பதை, கடந்த வெள்ளிக்கிழமையன்று, இங்கு சுட்டிக் காட்டியிருந்தோம்.

பொதுவாகவே—கடந்த எட்டாண்டுகளுக்கு மேலாகவே மக்கள், தங்களின் இன்றியமையாத் தேவைகளைக் கோரிக்கைகளாக வெளியிட்டு, நிறைவேற்றித் தருமாறு கேட்கும்போதெல்லாம், அவ்வப்போது இந்த மாநிலத்தில் இருந்து வந்திருக்கிற மந்திரி சபைகள், 'பொறுங்கள், பார்க்கலாம்; போதுமான பணவசதி இல்லை' என்ற 'பாடலை'யே அடி பிறழாது—சத்தம் தவறாது—ஒத்து ஊதுபவர்களையும் உடன் வைத்துக் கொண்டு 'மோகன'மாகவும், 'தோடி'யாகவும், 'இராகமாலிகை'யாகவும் இசைத்து வந்திருக்கின்றன—இன்றும் இசைக்கின்றன!

இதே பல்லவியைத்தான் தங்களுக்கு மூளையாகப் பயன்பட்டுவரும் சர்க்கார் ஊழியர்களுக்கும் பாடிக் காட்டி வந்திருக்கின்றனர்—வீழ்ந்து போய் விட்டனவும், வீழவிருக்கின்றனவுமான பல காங்கிரஸ் அமைச்சரவையின் உறுப்பினர்கள்!

'டில்லி சர்க்கார் ஊழியர்களைப் போலவே எங்களுக்கும் சம்பள விகிதங்களும், 'கிராக்கிப் படி'களும், இதர சலுகைகளும் தரப்பட வேண்டும்' என்ற தங்களின் கோரிக்கை முற்றிலும் நியாயமான ஒன்று என்பதை தெளிவாக்கியுள்ளனர், சென்னை சர்க்கார் ஊழியர்கள்.

'இந்தக் கோரிக்கையை, முழுவதுமாக இல்லாவிடினும், படிப்படியாகவேனும் நிறைவேற்றித் தருக' என்றும் அவர்கள் 'வழி' சொல்லித் தந்திருக்கின்றனர்.

இந்தப் பிரகாசமான நியாயத்தை, கண் படைத்தோர் காணுகின்றனர்; சர்க்கார் மட்டும் காண மறுக்கிறது!

கூட்டங்கள்—பணிவான 'மகஜர்'கள்—தீர்மானங்கள்—மாநாடுகள்—தூதுக் குழுக்கள் முறையீடுகள்—என்று, பல வழிகளிலும், தங்கள் துயர் துடைக்குமாறு கோரிவிட்டனர், ஊழியர்கள்! கடைசியாக இருந்த வழியையும், பண்டித நேரு, இறுமாப்போடு இழுத்து மூடிவிட்டார்.

வேறு வழியின்றி, 'ஜூலை 2-ல் சம்பளம் வாங்கமாட்டோம்' என்று அறிவித்துள்ளனர், 'நேரடி நடவடிக்கை'யின் முதல் கட்டமாக—ஊழியர்கள்!

சர்க்கார், இப்போது என்ன கூறுகிறது? சுப்பிரமணியம்—கனம் நிதி—நீதி—படிப்பு அமைச்சர், ஊழியர்களின் வெந்த புண்ணை இதயத்தில் பழுக்கக் காய்ந்த இரும்புத் துண்டைப் பாய்ச்சுவதுபோலப் பேசியிருக்கிறார்.

நேரடி நடவடிக்கை என்று பேசுகிறவரை, கோரிக்கைகளைக் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டாராம், அந்த மந்திரி!

நேரடி நடவடிக்கை எப்போது? வேறு வழிகள் அத்தனையும் தூர்ந்துபோன பின்னர் தானே! வேறு வழிகளில் கோரிக்கைகள் தெரிவிக்கப் பட்டபோது, கனம் மந்திரி, 'பணம் இல்லை' என்ற பழைய பல்லவியை, புதிய 'மோஸ்தரில்' பாடத் துவங்கினாரேயன்றி, கோரிக்கையின் நியாய அநியாயத்தை—சர்க்கார் ஊழியர்தம் அவல நிலையை எண்ணிப் பார்க்க முற்படாதது ஏன்? அப்போதெல்லாம், வாளாவிருந்துவிட்ட அமைச்சர் — சர்க்கார் ஊழியர்களை 'நேரடி நடவடிக்கை'யில் ஈடுபடுகிற நிலைக்குத் துரத்திவிட்ட அமைச்சரவையின் முன்னோடி, இன்று, 'நேரடி நடவடிக்கை என்று பேசினால், கோரிக்கையை ஏறெடுத்தும் பார்க்க மாட்டோம்' என்று பேசுவது, எவரை ஏமாற்ற?

ஊழியர்களின் நேரடி நடவடிக்கை நியாய விரோதமானது என்று மக்களை எண்ணச் செய்ய முடியும் என்று கருதுகிறாரா, அமைச்சர் சுப்பிரமணியம்? பரிதாபத்திற்குரியவர்!

ஊழியர்கள், 'முதலில் எங்களுக்குக் கிராக்கிப் படியையேனும், டில்லி ஊழியர்களுக்குக் கிடைக்கும் அளவுக்கு உயர்த்துங்கள்' என்று தெரிவித்திருப்பது, அவர்களின் நிலைமைகளை உள்ளபடி உணர்ந்து கொள்ளும் மனப்போக்கிற்கு எடுத்துக்காட்டல்லவா?

கோரிக்கை முழுவதையும் ஒரே நேரத்தில் ஈடேற்றுவதில் சர்க்காருக்கு நிதிக் கஷ்டம் இருக்க முடியும் என்பதால், ஒரு பகுதியையேனும் ஈடேற்றுமாறு கோருகின்றனர். இதற்கும், 'பணம் இல்லை' என்ற பல்லவிதான் பதில், என்றால், பணம் பெறும் வழிகளைப் பலமுறை நாம் வடவருக்கு 'சேவா சிம்மங்'களாக விளங்கும் இந்த சென்னை மந்திரிகளுக்கு எடுத்துக்கூறியிருக்கிறோமே! அவற்றையே திரும்பவும் நினைவூட்ட விரும்புகிறோம்.

'பணம் இல்லை' என்ற பல்லவி, தோற்றவே முடியாது என்று கருதப்பட்ட போராட்ட உள்ளம் சர்க்கார் ஊழியர்களிடத்தில் தோன்றிவிட்ட பிறகு, பயன்தராது என்பதை சர்க்கார் உணர வேண்டும்.

ஜூலை 2-ல், ஊழியர்கள் சம்பளம் வாங்க மறுத்துவிட்டால், அதன் மூலம், மாநில மக்களின் உளப்போக்கில் ஏற்படும் மாறுதல், நிச்சயமாகச் சர்க்காருக்கு விரோதமானதாகவே இருக்குமென்பதினால், வரட்டு கௌரவம் தங்கள் உணர்ச்சிகளில் மேலிட்டுவிடாது சர்க்கார் பார்த்துக் கொள்ள வேண்டும். பிடிவாதம்—பிரச்சினைகளுக்கு என்றுமே, சுமுக முடிவைத் தேடித்தந்ததில்லை. எத்தனை பலம் பெற்ற சர்க்காரானாலும், அவற்றின் 'மிரட்டல்'களும் அப்படித் தான்!

இலண்டன் தமிழர் கொதிப்பு

பண்டாரநாயகாவிற்கெதிராக ஆர்ப்பாட்டம்

'துரோகியே! தமிழர் விரோதியே! திரும்பிப்போ!' என்று முழக்கம்

இலண்டன், ஜுன் 26—

இங்கு நடைபெறும் காமன்வெல்த் பிரதமர் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக வந்த இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகாவுக்கு எதிராக ஆரவாரம் செய்வதற்கு, இலண்டன் விமான நிலையத்தின் வாயிற்புறத்தில், 30 பேர் கொண்ட ஒரு கூட்டத்தினர் காத்திருந்தனராம்.

"துரோகியே! இலங்கையிலுள்ள சிறுபான்மையினரை அழித்தொழிக்கும் கொடுஞ்செயலை நிறுத்து—இலங்கையின் ஒற்றுமையைக் குலைத்தவர் நீர்தான்—பிரிட்டனிலாவது நல்லபடி நடந்துகொள்—இலங்கையில் நடைபெறும் வகுப்புவாத வெறியாட்டத்தை நிறுத்து—சிறுபான்மையோர் உரிமையை அழித்தொழிக்கும் கொலைகாரனே திரும்பிப்போ"—என்ற வாசகங்களைக் கொண்ட அட்டைகளை ஏந்திய வண்ணம், இக்கூட்டத்தினர் நெடுநேரம் நின்று கொண்டிருந்தனராம்.

'இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகாவுக்கு இத்தகவல் எட்டியது; அவ்வளவுதான்! அவர், வேறொரு வாயிலின் வழியாக விமான நிலையத்திற்குச் சென்றுவிட்டார்' என்று, செய்தி ஒன்று கூறுகிறது.

வடநாட்டு அகதிகளுக்கு நஷ்ட ஈடு!

துரிதமாக அளிக்க ஏற்பாடு

அலகாபாத், ஜூன் 26—

"அடுத்த மூன்று ஆண்டுகளில், மேற்குப் பாகிஸ்தானிலிருந்து வரும் அகதிகளுக்கெல்லாம் நட்ட ஈடு அளிக்கப்பட்டுவிடும்," என்று இந்திய அரசாங்க அகதிகள் புனருத்தாரண துணை அமைச்சர் கூறியுள்ளார்.

கடந்த ஆண்டில், அகதிகளுக்கு ரூ. 25 கோடி நட்ட ஈடாக அளிக்கப்பட்டதென்றும், ஆனால் இந்த ஆண்டில் ரூ. 50 கோடி அளிக்கப்படும் என்றும், அவர் கூறியுள்ளார்.

மொத்தத்தில், ரூ. 185 கோடி அகதிகளுக்கு நட்ட ஈடாக அளிக்கப்படுமாம்!

பஞ்சப் பகுதிகளுக்கு பால் பவுடர் உதவி

ரூ. 3,37,754 பெறுமானமுள்ள 4,12,209 இராத்தல் பால் பவுடரை, மைசூர் மாநிலத்தில் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வழங்குவதற்காக இந்திய தேசீயக் கவுன்சிலின் நிவாரண நன்கொடை விநியோகக் குழுவினர் ஒதுக்கியுள்ளனர்.

டாட்டா நிறுவனத்திற்கு ஏழரை கோடி டாலர் கடன்!

இந்திய சர்க்கார் தந்த உறுதியின் பேரில் உலக பாங்கி அளிக்கிறது

பம்பாய், ஜூன் 27—

டாட்டா இருப்பு எஃகுக் கம்பெனிக்கு உலக பாங்கி $7\frac{1}{2}$ கோடி டாலர்கள் கடனாகக் கொடுத்துதவுமாம். ஜாம்செட்பூரில் உள்ள டாட்டா எஃகு தொழிற்சாலையை விரிவுபடுத்தும் திட்டத்திற்கு இத்தொகை உபயோகப்படுத்தப்படும்.

இக்கடன், ஒரு தனிப்பட்ட நிறுவனத்திற்கு உலக பாங்கியால் அளிக்கப்படும் மிகவும் பெரிய தொழில் கடன் உதவியாகும். இந்திய அரசாங்கம் அளித்த உறுதியின்பேரிலேயே இக்கடன் உதவி அளிக்கப்பட்டது.

இக்கடனை டாட்டா கம்பெனி 15 ஆண்டு காலத்தில் திருப்பி அளிக்கும்.

இந்தியாவின் பெரிய ஜாம்செட் தொழிற்சாலையானது ஆண்டுக்கு 10 இலட்சம் டன்னிலிருந்து 20 இலட்சம் டன் எஃகு உற்பத்தி செய்வதற்கு இக்கடன் உதவும்; அதற்குத் தேவைப்படும் இயந்திர சாதனங்களை வாங்குவதற்கு வசதியாக அயல்நாட்டுச் செலாவணியிலே கடன் கொடுத்து உதவப்படும்.

இக்கடனுக்கு $4\frac{3}{4}$ சதவிகிதம் வட்டி செலுத்தப்படும். இக்கடன் 11 சரிசமமான தவணைகளில் கட்டப்படும். இவ்வொப்பந்தம் கையெழுத்தாகி முடிந்த மூன்றாவது ஆண்டில் (1959—60) முதல் தவணைப் பணம் கட்டப்படும்.

'ஆங்கிலத்தை ஒதுக்கித் தள்ளாதீர்'

ஒரிசா கல்வியமைச்சர் கூறுகிறார்

கட்டாக், ஜூன் 26—

ஆங்கிலத்தைப் புறக்கணிப்பதில்லை என்றும் அதற்கு உயர்நிலைப் பள்ளிகளிலும், நடுநிலைப் பள்ளிகளிலும் உரிய முக்கியத்துவம் அளிப்பது என்றும் ஒரிசாவில் உள்ள பள்ளி மேற்பார்வை அதிகாரிகள் மாநாடு தீர்மானித்திருக்கிறது.

இந்த மாநாட்டிற்கு ஒரிசா கல்வி அமைச்சரான திரு. ராதாநாத் ராத் தலைமை வகித்தார்.

இந்த மாநாட்டில் கல்வி நிபுணர்கள் பலர் கலந்துகொண்டனர். இந்த மாநாட்டில் திரு. ராத் பேசியதாவது :—

"உலகில் ஆங்கிலம் பேசாத மற்ற நாடுகளில் எல்லாம் ஆரம்பக் கல்வி கட்டத்திலேயே வெளிநாட்டு மொழிகளைக் கற்றுக் கொடுக்கிறார்கள். குறிப்பாக ஆங்கிலத்தைக் கற்றுக்கொடுக்கிறார்கள். ஆகையால் இந்தியச் சிறுவர்கள் மூன்று மொழிகளை,—அதாவது, தாய் மொழி, இந்தி, ஆங்கிலம் ஆகிய மூன்றையும் கற்றுக்கொள்வது ஏன் கடினமானது? சாத்தியமற்றது என்று நாம் நினைக்கவேண்டும்? 6-வது வகுப்புக்கு மேல் தாய்மொழி, இந்தி ஆகியவற்றுடன் ஆங்கிலத்தையும் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கவேண்டும்"

பம்பாயில் தொழில்கள் துவங்க டில்லியின் உதவி

2,750 பேருக்கு வேலை தரத் திட்டம்

பம்பாய், ஜுன் 26—

பம்பாய் மாநிலத்தில் சுமார் ஒரு கோடி ரூபாய் மூலதனமிட்டு புதிய தொழிற்சாலைகளை நிறுவ மத்திய வர்த்தக—தொழில் இலாகா ஒத்துக்கொண்டிருக்கிறதாம்; இதனால் ஏறக்குறைய 2,750 பேருக்கு வேலை கிடைக்குமாம்.

"இந்த மாதிரியான 33 புதிய தொழிற்சாலைகளுக்கு ஏற்கனவே லைசென்சுகள் வழங்கப்பட்டுவிட்டன; ஏற்கனவேயுள்ள 3 நிறுவனங்களைப் பதிவு செய்வதற்காக 3 லைசென்சுகள் வழங்கப்பட்டன; ஆமதாபாத்தில், 'எஞ்சினீயரிங் பாக்டரி, சொந்தக்காரர்கள் சங்கம் ஒரு தொழில் 'எஸ்டேட்'டை அமைக்க உத்தேசித்துள்ளது; ஒரு 'கார்ப்பரேஷன்' அந்தத் தொழில் எஸ்டேட்டை நடத்த உத்தேசித்திருக்கிறது" என்றெல்லாம் கூறப்படுகிறது.

ஒதுக்கிய தொகையை உயர்த்த வேண்டும்

மைசூர் — ஆந்திர சர்க்கார்கள் திட்டக் குழுவை வற்புறுத்தும்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் துங்கபத்திரா நதிக் கால்வாய்க்கு ஒதுக்கப்பட்டதொகையை ரூ. 7 கோடியிலிருந்து ரூ. 12 கோடியாக உயர்த்த வேண்டுமென ஆந்திர அரசாங்கமும்—மைசூர் அரசாங்கமும் திட்டக் குழுவைக் கேட்பதற்குத் தீர்மானித்துள்ளன.

ஒரே விலையில் சிமெண்ட் விற்பனை

நாடு முழுமையிலும் கிடைப்பது பற்றிய விளக்கம்

புதுடில்லி, ஜூன் 26—

இந்திய அரசியலார், சிமெண்ட் விற்பனையை அரசினரின் வர்த்தக 'கார்ப்பரேஷன்' மூலம் மேற்கொள்வதென்றும், நாடெங்கும் ஒரே சீரான விலையில் சிமெண்ட் விற்பதென்றும், இப்பொழுதுள்ள சிமெண்ட் ஏஜெண்டுகள் மூலமே விற்பனை நடைபெறுவதென்றும், அவர்கள் அரசாங்க வர்த்தக 'கார்ப்பரேஷனின்' ஏஜெண்டுகளாக நியமிக்கப்பட வேண்டுமென்றும் முடிவு செய்துள்ளனராம், எந்த ஊர் இரயில்வே நிலயத்திலும் டன் ரூ. 102—8—0 வீதம் 'டெலிவரி' செய்யப்படுமாம்.

5 இலட்சம் டன் சிமெண்ட் இறக்குமதிக்கு அரசியலார் ஏற்பாடு செய்துள்ளனர் என்றும், முன்னேற்றத் திட்ட வேலைகள் தடைபடாமலிருக்க வேண்டுமென்பதற்காகவே இவ்வித ஏற்பாடுகள் என்றும் தெரியவருகிறது.

சிமெண்ட் உற்பத்தியாளர்கள், அடுத்தத் திங்கள் முதல் தேதியன்று, தங்கள் வசமுள்ள சிமெண்ட் முழுவதையும், அதற்குப் பின்னர் தயாரிக்கும் சிமெண்ட் முழுவதையும் அப்படியே இராஜாங்க வர்த்தக 'கார்ப்பரேஷன் லிமிடெட்'டுக்கே விற்க வேண்டுமென உத்திரவு பிறப்பிப்பதன் மூலம், அரசியலார், தம் திட்டத்தை அமுல் செய்யத் தீர்மானித்துள்ளனராம், என்றாலும், இப்பொழுதுள்ள விற்பனைத் துறைகள், நிறுவனங்களுக்கு தொல்லை இருக்கலாகாதென்பது சர்க்காரின் எண்ணமாம். எனவே, உற்பத்தியாளர்களின் தற்போதைய ஏஜெண்டுகள் மூலமே சிமெண்ட் விநியோகத்துக்கு ஏற்பாடு செய்யப்படும் என்றும் தெரியவருகிறது.

இறக்குமதி சிமெண்ட் விற்பனை முழுவதற்குங்கூட 'கார்ப்பரேஷன்'தான் பொறுப்பாம்.

நாடெங்கிலும் ஒரே விலையில் டன் ஒன்று ரூ. 102—8—0 ஆக, 'கார்ப்பரேஷன்' விற்பனை செய்யும் என்றும், இன்றுள்ள கட்டுப்பாட்டு விலையைவிட இது அதிகம் என்றும் கூறப்படுகிறது.

இந்தியாவில் தற்போது ஆண்டிற்குச் சுமார் 45 இலட்சம் டன் சிமெண்ட் உற்பத்தியாகிறது.

குறைந்த வருவாயுள்ள குடும்பப் பெண்களுக்கு !

தையல் இயந்திரங்கள் தரும் ஏற்பாடுகள் பற்றி தகவல்

சென்னை, ஜுன் 26—

குறைந்த வருவாயுள்ள குடும்பப் பெண்களுக்கு சிறு தொழில் 'கார்ப்பரேஷன்' வாடகை-தவணை அடிப்படையில் வழங்க இருக்கும் தையல்இயந்திரங்கள் இந்தியசமூக நல போர்டின் கிளைகள் மூலம் விநியோகிக்கப்படலாமெனத் தெரிய வருகிறது.

"இல்லத்திலுள்ளவாறே பெண்கள் தயாரிக்கும் துணிகளை விற்பனை செய்யவும் மத்திய அரசினரால் ஏற்படுத்தப்பட்ட இந்தக் 'கார்ப்பரேஷன்' ஏற்பாடு செய்யும்; இத்துணிகளுக்கு 'ஆர்டர்' தரும்படி சர்க்கார் கேட்டுக்கொள்ளப்படலாம். இந்தக் 'கார்ப்பரேஷன்' தையல் இயந்திரங்கள் மட்டுமல்லாமல் மற்றைய தொழில்களுக்கான இயந்திரங்களையும் வழங்கும்; முதலில் ரூ. 25 பெற்றுக்கொண்டு இயந்திரங்களைத் தரும். மீதித் தொகை திங்கள் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் வாங்கப்பட்டு ஈடு செய்யப்படும்," என்று, கூட்டமொன்றில், திருமதி துர்க்காபாய் தேஷ்முக் கூறியுள்ளார்.

24கோடி பவுன்மதிப்புள்ள மின்சார சாதனம்

பிரிட்டன் ஏற்றுமதி செய்தது

சென்ற ஆண்டில் 24,50,00 000 பவுன்கள் மதிப்புள்ள மின்சார சாதனங்களை, பிரிட்டன் ஏற்றுமதி செய்திருக்கிறது. இந்தத் துறையில், அமெரிக்காவும் மேற்கு ஜெர்மனியும் பிரிட்டனுடன் போட்டியிடுகின்றன.

பிரிட்டிஷ் ஏற்றுமதியில் 60 சதவிகிதம் தென் ஆப்பிரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, நியூசிலந்து ஆகிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டது. மற்ற பகுதிகள் ஐரோப்பாவுக்கும், தென் அமெரிக்க நாடுகளுக்கும் அனுப்பப்பட்டது

பொதுத் தேர்தலுக்கு துரிதமான ஏற்பாடுகள்

15 நாட்களுக்குள் வாக்குப் பதிவு முடிவுறும்

முடிவுகளும் விரைவில் அறிவிக்க வழிகோலப்படுகிறது

புதுடில்லி, ஜுன் 26—

பொதுத் தேர்தல்களுக்கான ஏற்பாடுகள் எல்லா மாகாணங்களிலும் துரிதமாக நடைபெற்று வருகின்றன. நாடு முழுவதும் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதத் தொடக்கத்தில் பொதுத் தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தல் நடத்துவதற்கான திட்டம் எதுவும் இன்னும் வரையறுக்கப்படவில்லை என்றாலும் நாடு முழுவதிலும் தேர்தல் நடத்துவதற்கான சரியான காலம் பிப்ரவரி மாதமே என்று தேர்தல் குழு கருதுகிறது. போக்குவரத்து, பருவநிலை, அறுவடை ஆகிய வசதிகளைப் பொறுத்தே மேற்கண்டவாறு கருதப்படுகிறது.

சென்ற பொதுத் தேர்தலில் நடைபெற்றது போலில்லாமல் இந்தப் பொதுத் தேர்தலில் எல்லா மாகாணங்களிலும் வாக்கெடுப்புகள் ஒரே சமயத்தில் நடைபெற்று 15 நாட்களுக்குள் முடிந்துவிடும். தேர்தல் முடிவுகள் வெளியிடுவதும் விரைவிலேயே வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தலுக்கான தொடக்க வேலைகளை முடிப்பதற்கான ஏற்பாடுகளை தேர்தல் குழு எடுத்துக்கொண்டுள்ளது. இறுதியாகத் தயாரிக்கப்பட்டுள்ள மக்கள் பிரதிநிதித்துவ சட்ட விதிகள் அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

மாகாணப் புனரமைப்பு மசோதா நிறைவேறியவுடனேயே தொகுதியின் எல்லையை நிர்ணயிப்பதற்காக எல்லைக் குழு அமைக்கப்படும். இதற்குப் புதிய மாகாண அமைப்புகள் ஏற்படும் வரை காத்திருப்பது அவசியமில்லையென்று கூறப்படுகிறது. எல்லைக் குழுவின் வேலைகள் நவம்பர் மாதத்திற்குள் முடிவடைந்து விடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

பல மாகாணங்களில் வாக்காளர் பட்டியல் திருத்தப்பட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன அல்லது வெளியிடப்பட்டு வருகின்றன.

மாகாணப் புனரமைப்பு செய்த பின்னர், அதாவது அக்டோபர் வாக்கில்தான் இப்பட்டியல் இறுதியாகத் தயாரிக்கப்படும்.

பல்வேறு அரசியல் கட்சிகள், சட்டசபை உறுப்பினர்கள் ஆகியோரைக் கலந்துகொண்டு எங்கெங்கு வாக்குச்சாவடிகள் ஏற்படுத்துவது என்பது பற்றி ஒரு பட்டியல் தயாரிக்குமாறு ஏற்கனவேயே மாகாண அரசாங்கங்களுக்கு உத்தரவு அனுப்பப்பட்டுள்ளது.

சென்ற பொதுத் தேர்தலில் பயன்படுத்தப்பட்ட வாக்குப் பெட்டிகளின் அமைப்பை இத்தேர்தலின்போதும் மாற்றுவதில்லை என்று தேர்தல் குழு தீர்மானித்துள்ளது.

இந்த வாக்குப் பெட்டிகள் உடைப்பதற்கு இலகுவாக இருக்கிறது என்று கடந்த காலத்தில் சிலர் அச்சம் தெரிவித்தனர். ஆனால், இப்பொழுது அது போன்று செய்ய முடியாதென்று தேர்தல் குழு வட்டாரங்கள் உறுதி கூறுகின்றன, தேர்தல் காலம் அதாவது தேர்தலுக்கான அபேட்சா பத்திரங்கள் தாக்கல் செய்வது பரிசீலனை; திரும்பப் பெறுவது, தேர்தல் நடப்பது ஆகியவைகள் 36 நாட்களிலேயே நடைபெற்று முடிந்துவிடும். சென்ற பொதுத் தேர்தலில் இதற்குக் குறைந்தபட்ச காலம் 42 நாட்கள்.

ஆந்திராவைத் தவிர மற்ற மாகாணங்கள் அனைத்திலும் புதிய தேர்தல்கள் நடைபெறும். ஏனெனில் ஆந்திராவில் 1955 மார்ச்சில் தான் பொதுத் தேர்தல் நடைபெற்றது. உத்தேச மாகாணத்தில் ஆந்திராவுடன் தெலுங்கானா சேர்ந்தபோதிலும், தெலுங்கானாவிலிருந்து மாத்திரம் புதிய மாகாண சட்டசபைக்கு தனது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பும். தேர்தலுக்கு முன்னர் தற்போமுதைய மாகாண சட்டசபைகளையும், மக்கள் சபையையும் கலைப்பது பற்றி இனிமேல்தான் அரசாங்கம் முடிவு செய்யவேண்டும்.

'நஞ்சு'க்கு எதிராகப் பலன் மிக்க மருந்து

சிக்காகோ—

கடுமையான சுவாச நோய்களை விளைவிப்பதும் சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதுமான நஞ்சுக்கு எதிராகப் பலனளிக்கும் ஊசி மருந்து தயாரிக்கப்பட்டுள்ளதாம்.

இந்த மருந்து, 'சால்க்' இளம் பிள்ளைவாத ஊசி மருந்து தயாரிக்கப்பட்ட முறையிலேயே ஏற்பட்டதுதான்.

இரயில்[redacted]தையில் மக்களின் சத்தியாக்கிரகம்

பீகார்—வங்க எல்லைத் தகராறு எதிரொலி

கோரக்பூர், ஜுன் 25—

வடபீகாரிலுள்ள கிசன்கஞ்ச் பகுதியை மேற்கு வங்கத்தில் சேர்ப்பதை எதிர்த்து, வடகிழக்கு இரயில்வேயில் இரு நிலையங்களுக்கு இடையிலுள்ள பாதையில் உட்கார்ந்து, மக்கள் சத்தியாக்கிரகம் செய்ததையொட்டி, நேர் இரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

ஜமைக்காவுக்கு உயர்ந்தரக இந்திய மாஞ்செடிகள்

மாம்பழ உற்பத்திக்கு விரிவான திட்டம் தயாரிப்பு

ஜமைக்கா சர்க்கார், மாம்பழ உற்பத்திக்காக விரிவான திட்டம் தயாரித்திருக்கிறார்கள். பயிர் செழிக்கக்கூடிய இடங்களைப் பொறுக்கி, அவ்விடங்களிலுள்ள விவசாயிகளுக்கு மாங்கன்றுகளை இலவசமாக விநியோகிப்பார்கள். மற்ற இடங்களில் பயிரிட விரும்புவோருக்கு மலிவான விலையில் கொடுப்பார்கள். சுமார் ஆயிரம் ரக மாங்கன்றுகளைப் பயிரிட்டுச் சோதிக்க, விவசாய இலாகா திட்டமிட்டிருக்கிறது. இவற்றில் இந்தியாவிலுள்ள உயர்ந்த ரசச் செடிகளும் உண்டு.

நூதன விவசாயப் பண்ணை முறைகளைக் கண்டறிய !

இந்திய விவசாய இலாகா 15 - விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து, ஆஸ்திரேலியாவில் ஆறு திங்கள் தங்கி நூதன விவசாய பண்ணை முறைகளை நேரில் கண்டறிய அனுப்பும் எனத் தெரிகிறது.

ரஷ்யாவிற்கு 'ஆமாம்' போடும் கம்யூனிஸ்டுகளின் செம்மறியாட்டுக் குணம்!

கைவிடுமாறு இத்தாலிய கம்யூனிஸ்டு தலைவர் தெளிவுரை!

சுய சிந்தனையால் சொந்த வழி கண்டு நடக்க வேண்டும் என உபதேசம்

ரோம், ஜுன் 26—

"சோஷலிசத்தை அடைவதற்கு, இத்தாலிய நாட்டு கம்யூனிஸ்டுகள், தாங்களாகவே ஒரு வழி—'இத்தாலிய வழி' காண்பதில் தொடர்ந்து ஈடுபடவேண்டும்; சுயமாகச் சிந்தித்து வழிகாண வேண்டும்"

என்று, இத்தாலிய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் தோக்லியாட்டி கூறியிருக்கிறார்.

இத்தாலிய கம்யூனிஸ்டு கட்சியின் மத்திய கமிட்டிக் கூட்டம், ஒரு வாரமாக நடைபெற்று முடிந்த பின், கட்சிக் கொள்கை வகுக்கப்பட்டது என்றும், அதன் பின்னரே தோக்லியாட்டி இந்தக் கருத்தை அறிவித்திருப்பதாயும் தெரியவருகிறது.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது :—

"இன்றைய ரஷ்ய ஆட்சியாளர்கள், ஸ்டாலின் காலத்திய 'தவறு'கள் திரும்பவும் நிகழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

"ஸ்டாலின் காலத்திய 'தவறு'களுக்கு, இன்று அவற்றைச் சுட்டிக்காட்டி குறை பேசுபவர்களும், கூட்டுப்பொறுப்பாளிகள்தான் !

"இப்போது, ரஷ்ய கம்யூனிஸ்டு கட்சிக்கும், இதர நாடுகளில் உள்ள கம்யூனிஸ்டு கட்சிகளுக்கும் இருக்கவேண்டிய உறவுகள் புதிய வெளிச்சத்தில், நிர்ணயிக்கப்பட வேண்டும்.

"உலக கம்யூனிஸ்டு முறை, இனி சோவியத் ரஷ்யாவின் அனுபவங்களை மட்டும் கணக்கிலெழுதிக்கொண்டு நிர்ணயிக்கக்கூடாது; மாறாக, பல்வேறு நாடுகளின் அனுபவங்களையும், கணக்கில் கொண்டு, நிர்ணயிக்கப்படவேண்டும்."

ஜனநாயகத்தையும் நியாயத்தையும் குழிதோண்டி புதைத்துவிட்டார் நேரு

'போராடுவதைத் தவிர வேறு வழியில்லை'

'உண்மையான ஜனநாயகமா? அல்லது ஜனநாயகப் போர்வையில் முதலாளி ஆட்சியா?'

'ஆளும் கட்சி, துப்பாக்கி முனையால் மக்களை நிர்ப்பந்திப்பது ஏன் ?'

என். வி. காட்கில் போர் முழக்கம்

பூனா, ஜுன் 26—

"பம்பாய் கூட்டத்தில் பேசும்போது பண்டித நேரு, 'பூகோளமோ, அல்லது (மொழிவழி மக்களின்) எண்ணிக்கையோ, அல்லது வாதங்களோ அல்ல, எல்லாம்' என்று பேசியிருக்கிறார்; இதை வேறு வார்த்தைகளால், கூறவேண்டுமானால், நேரு ஜனநாயகத்தையும், நியாயத்தையும் குப்பையில் ஒதுக்கி விட்டார் என்றே கூறவேண்டும்.

"ஆளும் கட்சி, தனது முடிவை, துப்பாக்கி முனையால்—தோட்டாக்களால் மக்களிடம் திணித்துவிடலாம் என்று கருதுகிறது. எனவே, நடைபெறப் போகிற போராட்டம், பம்பாய் மராட்டியத்துடன் இணைய வேண்டும் என்ற விவகாரத்திற்காக மட்டுமல்ல; உண்மையான பொருள் உள்ள ஜனநாயகம் இந்த நாட்டில் நிலவப் போகிறதா? அல்லது, ஜனநாயகம் என்ற போர்வையில், சில முதலாளிகளின் ஆட்சிதான் நடைபெறப் போகிறதா என்ற விவகாரத்திற்காகவும்தான், போராட்டம் !

"மாநில புது அமைப்பு மசோதா, இப்போதுள்ளது போலவே, நிறைவேற்றப்படுமானால், மராட்டியர் இந்தப் போராட்டத்தில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

"மராட்டியத்தில் உள்ள எந்த நபரும், எந்தக் கட்சியும், மந்திரி பதவி ஏற்கமாட்டார் என்பதை எடுத்துரைக்க விரும்புகிறேன்.

"போராட்டம் அமைதியானதாக, அறவழி நிற்பதாக, ஜனநாயகத்திற்கு உட்பட்டதாகவே இருக்கும்"

என்று, முழக்கமிட்டிருக்கிறார், என். வி காட்கில்—இங்கு கூட்டம் ஒன்றில் பேசும்போது !

மேலும் அவர் கூறியுள்ளதாவது :—

"மராட்டியருக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதிக்குச் சமமான வேறொன்றைக் காட்டவே முடியாது; இந்த விவகாரத்தில் சமரசத்திற்கு இடமே இல்லை.

"மாநில புது அமைப்பு விவகாரத்தில் டில்லி சர்க்காரும், காங்கிரஸ் தலைமையும் நேர்மையாக நடந்துகொள்ளவில்லை.

"தனிப்பட்டவர்கள், மற்றும் ஒரு தொகுதி மக்கள் ஆகியோரின் உரிமைகள், சுதந்திரம் பாதுகாக்கப்படவில்லை; அவை அவர்களுக்குக் கிடைக்கவில்லையானால், சுதந்திரம் பெற்றுவிட்டோம் என்பது அர்த்தமற்றதாகும்."

எழுத்தாளர் மாநாடு

இலண்டனில், ஜுலை 8-15 தேதிகளில் நடைபெறும் சர்வதேச எழுத்தாளர் மாநாட்டில், உலகின் பல பாகங்களைச் சேர்ந்த 700 - எழுத்தாளர்கள் கலந்துகொள்வார்கள். பிரிட்டனில் இப்போது தான் முதல் முதலாக எழுத்தாளர் மாநாடு நடைபெறுகிறது.

கைத்தறியில் விசைத் தறி !

திட்டங்கள் தயாரித்தனுப்ப மத்திய சர்க்கார் கோரிக்கை

புதுடில்லி, ஜுன் 26—

இந்திய சர்க்கார், கைத்தறித் துறையில் விசைத் தறிகளைப் பொருத்துவது சம்பந்தமான திட்டங்களைத் தயாரித்து அனுப்பும்படி மாநில அரசுகளை கேட்டுக்கொண்டுள்ளது எனத் தெரிகிறது.

கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டோர் கூட்டுறவு முறையில், சிக்கனமாகக் கைத்தறி துணிகளை நெய்வதற்காகவே விசைத்தறிகள் கைத்தறியில் பொருத்தப்படவிருக்கின்றனவாம்.

இரண்டாவது திட்டத்தில் உபரியாக உற்பத்திச் செய்யப்படவிருக்கும் 17 000 இலட்சம் கெசத் துணியில் 2,000 இலட்சம் கெசத் துணி விசைத்தறி உபயோகம் மூலம் கைத்தறித் துறையில் தயாரிக்கப்பட வேண்டும் எனக் கூறப்படுகிறது.

விசைத்தறிகளைப் பொருத்துவதிலும், அதில் நெசவைக் கற்றுத் தரவும் சிலருக்கு மாநில அரசினர் பயிற்சி தரவேண்டுமாம்.

1956—58 ஆண்டுகளுக்குள் 85,000 விசைத்தறிகளை பொருத்த இந்திய அரசியலார் அண்மையில் அறிவித்திருந்தது நினைவிலிருக்கலாம்.

பிறப்பு

18—6—56 இரவு, சென்னை - 1-வது வட்ட தி. மு. கழகத் தோழர் பொ. சம்பந்தன் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் ஒரு ஆண் மகவுக்குத் தாயாரானார்.

நகா[illegible]றங்களில் வேலையில்லாக் கொடுமை!

50 இலட்சம் பேர்கள் திண்டாடுகின்றனர்!

திட்டக் குழு ஆலோசகர் தரும் கணக்கு

புதுடில்லி, ஜுன் 27—

இந்தியா முழுமையிலும் நகர்ப்புறங்களில் வேலையில்லாது திண்டாடுவோரின் எண்ணிக்கை, சுமார் 50 இலட்சம் என்று திட்டக் குழுவைச் சேர்ந்த மஹாலனோபிஸ் கணக்கிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

1953-ம் ஆண்டு இறுதியில், 'தேசிய மாதிரி சர்வே' இலாகாவினர் நடத்திய கணக்கெடுப்பின் விளைவுகள் குறித்து அவர் கூறும்போதுதான் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறார்.

மேலும் அவர் பேசும்போது, இந்த வேலையில்லாத் திண்டாட்டம் இரண்டாம் திட்ட காலத்தில், பெருகுவதற்கு இடமளிக்கக்கூடாது என்றும், குறைந்தபட்சம் இந்தத் திட்ட காலத்தில், புதிதாக வேலை தேடி வருவோருக்கேனும் வேலை தேடித் தர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

"வேலையில்லாத் திண்டாட்டமும், பற்றுக்குறை வேலையும்தான் இன்று, மிகப் பெரிய பிரச்சினைகளாக உள்ளன; எனவேதான், இந்தியாவில், அபிவிருத்திக்காகத் திட்டங்கள் தீட்டும்போது வேலையில்லாத் திண்டாட்டத்தை அறவே நீக்குவதை முன்னிறுத்தி, திட்டமிட வேண்டியுள்ளது,"
என்றும் அவர் கூறியிருக்கிறார்.

நிதி உதவுமாறு டில்லியிடம் சென்னையின் கோரிக்கை

'டோன்ட்' பால் உற்பத்தியை அதிகரிக்கத் திட்டம்

புதுடில்லி, ஜுன் 27—

சென்னை சர்க்கார், 'டோன்ட்' பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, டில்லி சர்க்காரின் உதவியைக் கோரியிருக்கின்றனராம்!

பசும் பால் தரும் சத்துக்களைத் தரவல்லது என்று கருதப்படும் இந்த 'டோன்ட்' பால் உற்பத்தியில் சென்னை சர்க்கார் மட்டுமே ஈடுபட்டிருக்கிறது.

இந்தப் பால் இப்போது, மக்களிடை அதிகமாகப் பிரபலமாகி வருவதால், அடுத்த ஐந்தாண்டுக்குள்ளாக, இப்போது போல பத்து மடங்கு இந்தப் பால் உற்பத்தியை அதிகரிக்க திட்டமிட்டிருப்பதாயும், இதற்கு ரூ. 10 இலட்சம் தேவை என்றும், இந்தத் தொகையில் கணிசமான அளவைத் தந்து உதவ வேண்டுமென டில்லி சர்க்காரை, மாநில சர்க்கார் கேட்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

வழுக்கி விழுந்த பெண்களுக்கு!

ஒவ்வொரு மாநிலத்திலும் சரணாலயம்

சென்னை, ஜுன் 27—

வாழ்க்கையில் வழுக்கி விழுந்த பெண்களுக்கு வாழ்வளிப்பதற்காக, ஒவ்வொரு மாநிலத்திலும் சரணாலயங்கள் அமைப்பது குறித்து டில்லி சர்க்கார் திட்டமிட்டு வருகிறதாம்.

இந்தத் தகவலை மத்திய சமூக நலக் கழகத் தலைவி திருமதி துர்காபாய் தேஷ்முக் தெரிவித்திருக்கிறார்.

இரண்டாம் திட்ட காலத்தில் இவை நிறுவப்படும் என்றும், ஒவ்வொரு சரணாலயத்திலும் தொழில் கற்றுத் தரும் நிலையமும் அமைக்கப்படும் எனறும் அவர் கூறியிருக்கிறார்.

சமூக சேவையில் ஈடுபட்டிருப்போருக்கு, சட்டரீதியான பாதுகாப்புத் தரவேண்டும் என்றும், இன்றேல், அவர்கள் வேலை மிகக் கடினமானதாகிவிடக் கூடும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

ஒழுக்கக்கேடான நடத்தை அகற்றப்படுவதற்கும், தடுக்கப்படுவதற்குமான ஒரு சட்டம் சீக்கிரமே டில்லி மக்கள் சபையில் கொண்டு வரப்படவிருக்கிறது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

பிரதமர் பதவி:

துறந்துவிட வேண்டுமென மனம் உறுத்துகிறதாம்!

"பிரதம மந்திரி பதவியைவிட்டு விலகிவிட வேண்டுமென்று சில ஆண்டுகளாகவே எனக்கும் 'மன உறுத்தல்' இருந்தது; சில சமயங்களில் மீண்டும் அந்த 'மன உறுத்தல்' ஏற்படுகிறது; சிறிது காலத்திற்காவது நான் பதவியிலிருந்து விலகியிருந்தால் எனக்கும் நல்லது—நாட்டிற்கும் நல்லது என்ற எண்ணம், மனதின் ஒரு கோடியில் தோன்றுகிறது"

—என்று பண்டித நேரு, பர்மாவின் முன்னாள் பிரதமர் யு-நூவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

ஊழியர்களை மிரட்டிய...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"சர்க்கார் ஊழியர்கள் இந்த அறிக்கைக்குப் பின்னும் சம்பள மறுப்பு போன்ற ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவார்களேயானால், நிச்சயம், சர்க்கார் தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதுடன், தங்கு தடையின்றி ஒழுங்கு முறை தவறாது அலுவலகங்களில் வேலை நடைபெறுவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் செய்யும்,"

என்றும், அறிக்கை மூலம் சர்க்கார் ஊழியர்களின் போராட்ட உள்ளத்தைச் சிதைக்க நினைத்திருக்கிறது!

பதவியிலிருந்து விலகும் சட்டசபைத் தலைவர்

காங்கிரஸ் தலைவர் தேபரின் யோசனையை நிராகரிக்கிறார்!

பம்பாய், ஜுன் 27—

வெகு சமீபத்தில், தான் பதவியிலிருந்து விலகிக்கொள்ளப் போவதாக டி. கே. குந்தே என்ற பம்பாய் சட்டசபைத் தலைவர் அறிவித்துள்ளார்.

பம்பாய் மராட்டியத்துடன் இணைக்கப்படாததை எதிர்த்தே இவரும் இராஜினாமா செய்கிறார் எனவும்; இவர், நிதி மந்திரி தேஷ்முக் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதியிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்றும், தேஷ்முக் பதவியிலிருந்து விலகும் நாளிலேயே இவரும் பதவியைத் துறப்பார் என்றும் தெரியவருகிறது.

'பதவியைத் துறப்பது, தேச நலனைப் பொறுத்து உகந்தது அல்ல' என்று காங்கிரஸ் தலைவர் தேபர் தெரிவித்திருந்தும், குந்தே பதவியைத் துறக்க முடிவு செய்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தகுந்தது.

மதுரை நகர்

'கார்ப்பரேஷன்' ஆகிறது

மதுரை, ஜுன் 27—

மதுரை நகர், 'முனிசிபாலிடி'யாக இருக்கும் நிலையிலிருந்து சென்னையைப்போல், 'கார்ப்பரேஷன்' என்ற நிலைக்கு உயர்த்தப்படவிருக்கிறது.

இந்தத் தகவலை, மந்திரி இராமசாமி படையாச்சி தெரிவித்திருக்கிறார்.

இதற்காக சர்க்கார் ஒரு மசோதாவை தயாரித்துக்கொண்டிருப்பதாயும், இந்த ஆண்டு இறுதிக்குள்ளாகவே மதுரை நகர், 'கார்ப்பரேஷன்'ஆகிவிடுமென்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஜூலை முதல் வாரம் வெளிவருகிறது!

ஜனயுகம்

(கலை — இலக்கிய — அரசியல் மாதம் இருமுறை)

டெம்மி ¼ ★ 16 பக்கங்கள் ★ விலை 2 அணா

பிரதி ஒன்றுக்கு 4 அணா முன்பணம் கட்டும்
ஏஜண்டுகள் தேவை. 25% கழிவு உண்டு.

உடனே விண்ணப்பிக்கவும்
மானேஜர் : 'ஜனயுகம்'
259, அங்கப்ப நாய்க்கன் தெரு, சென்னை-1

கிளைக் கழகச் செயலாளர்களுக்கு:

★

தி. மு. கழக உறுப்பினர் உரிமைச் சீட்டு, 22—6—56 முதல் அந்தந்த கிளைகளுக்குத் தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பப்பட்டு வருகிறது.

கிளைக் கழகச் செயலாளர்கள், அந்தந்த உறுப்பினர்களுக்கு உரிமைச் சீட்டை உடனடியாக வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

என். வி. நடராசன்

'அறிவகம்' சென்னை-13 22-6-56 — துணைப் பொதுச் செயலாளர் தி. மு. கழகம்

தென் ஆற்காடு மாவட்டத்தில்:

என். வி. நடராசன்

சுற்றுப் பயணம்

★

,, 29 : சோழம்பட்டு
,, 30 : உலகுடையாம்பட்டு

கழகக் கூட்டம்

★

சேத்தியாதோப்பு
29—6—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ.
பேசுபவர் :
அண்ணா

★

கீரனூர்
போதுச்சாவடி மைதானத்தில்
30—6—56 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
கோவை - செழியன்
அ. தமிழரசு

★

செங்கமேடு
30—6—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
பூவராகசாமி
பேசுவோர்:
சிற்றுளி—சுப்பிரமணியம்
என். கிட்டப்பா
கே. எஸ். சௌந்தரராசன்

சென்னை 16-வது வட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

30—6—56 இரவு 8 மணிக்கு, கழகப் பணிமனையில், கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

29—6—56 மாலை 6 மணியளவில், சென்னை-1, சாலைவிநாயகா கோயில் தெரு, எண் 17, முத்தமிழ் மன்றப் பணிமனையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும். தோழர் தெ. அன்பரசு அவர்கள் தலைமையில், 'தமிழர் நிலை' எனும் பொருள் பற்றி மன்றத் தோழர்களும், மற்றும் பலரும் பேசுவர்.

திருமணம்

26-6-56 காலை 8 மணியளவில், வேலூர்—திராவிட நகர் (புதுத் தெருவில்) தோழர் வி. எம். தேவராசு தலைமையில், திராவிட நகர் தி. மு. கழகச் செயலாளர் தோழர் பா. சோமு—தோழியர் இராசாம்பாள் திருமணம் நடைபெறும். தோழர்கள் அ. கருத்தோவியன், அ. பாலகிருஷ்ணன் வாழ்த்துரை வழங்குவர்.

மழை வருமா? வராதா?...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொங்கவிட்டுக் கொண்டு, ஒரு கட்டிடத்திற்குள் இந்தச் சூதாட்டம் நடைபெற்றதாம்.

கைதானவர்கள், பின்னர் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

சூதாட்டம் நடைபெற்ற வீடு, இதற்குப் பெயர் போன ஒரு 'குகை' என்று போலீசார் கூறுகின்றனராம்!

வாக்காளர் பட்டியல்கள் திருத்த காலம் நீடிப்பு

தற்போது தயாரிக்கப்பட்டுவரும் வாக்காளர் பட்டியல்கள், அடுத்துவரும் பொதுத் தேர்தலில் பயன்படுத்தப்படுமாதலால், தகுதியுள்ளவர்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்துகொள்ளுவதற்குப் போதிய அவகாசம் தரப்படுவதற்குக் கீழ்க்காணும் சட்டசபைத் தொகுதிகளைப் பொறுத்த வரையில் மனுச செய்துகொள்ளவும், ஆட்சேபணைகள், திருத்தங்கள் ஆகியவற்றைத் தெரிவித்துக்கொள்ளுவதற்குமான காலவரையறையைத் தேர்தல் குழு நீடித்திருக்கிறது.

அறந்தாங்கி (தஞ்சை மாவட்டம்); டி. பாலூர், ஜெயங்கொண்டான், அரியலூர் (திருச்சிமாவட்டம்); முதுகுளத்தூர (இராமநாதபுரம மாவட்டம); மதுரை கிழக்கு, மத்திய மதுரை, திருப்பரங்குன்றம, நிலக்கோட்டை, மேலூர் (மதுரை மாவட்டம)—ஜூலை 12.
கரூர், குளித்தலை (திருச்சி மாவட்டம்)—ஜூலை 14.
சிதம்பரம (தென்னாற்காடு மாவட்டம)—ஜூலை 17.
செய்யாறு வட ஆற்காடு மாவட்டம)—ஜூலை 19.
பாடியக்கிரகாரம (வட ஆற்காடு); அதிராமபட்டணம், பட்டுக்கோட்டை (தஞ்சை மாவட்டம)—ஜூலை 24.
ஓமலூர் (சேலம மாவட்டம'—ஜூலை 25.
உடுமலைபேட்டை (கோவை மாவட்டம்)—ஜூலை 26.

தகுதியுள்ளவர்கள், தங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் சேர இந்த அவகாசத்தைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுககொள்ளப்படுகின்றனர். தேவையான நமூனுககள் அந்தந்த மாவட்ட ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகள், தாசில்தார்கள், டெபுடி தாசில்தார்கள், முனிசிபல் கமிஷனர்கள், ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள், பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகள், கிராம அதிகாரிகளிடம் இலவசமாகக் கிடைக்கும்.

கிளைக் கழகச் செயலாளர்களே—உங்கள் ஊரிலுள்ள கழகத் தோழர்கள், தங்களை வாக்காளர் பட்டியலில் பதிவு செய்து கொண்டார்களா — இல்லையெனில், அதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டுகிறோம்.

—தலைமைக் கழகம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.